

# LEADER

**எல்லைகளைத் தாண்டி...**

இதழ் 17 ஆனி 2017

முகாமைத்துவ துறை
வர்த்தக முகாமைத்துவ பீடம்
கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை.

2017

# ஆசிரியர் செய்தி

“லீடர்” எனும் எமது சஞ்சிகையின் பதினேழாவது இதழூடாக உங்களை மீண்டும் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி. கடந்த சஞ்சிகையில் பலரும் பலவித கருத்துக்களையும், ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் தந்து எம்மை ஆதரித்திருந்தீர்கள். அனைத்து லீடர் ஆர்வலர்களுக்கும் எம் நன்றிகள்.

இந்த இதழில் க.பொ.த உயர்தர மாணவர்கள், பல்க--லைக்கழக மாணவர்கள், மற்றும் வங்கி ஊழியர்கள் போன்றோரையும் கருத்திற்கொண்டு ஆக்கங்களை வெளியிடுகின்றோம். தொடர்ந்து உங்களின் ஆதரவு எமக்குக்கிட்டும் என்னும் உறுதியான நம்பிக்கையில் இவ் இதழை உங்களின் கரங்களில் தவழவிடுகின்--றோம்.

**ஆசிரியர்**
**திரு. ரா. கிஷோகுமார்**
**விரிவுரையாளர் (தகுதிகாண்)**
**முகாமைத்துவ துறை**

*தங்களின் கருத்துக்கள் ஆலோசனைகள், விமர்சனங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:*

**ஆசிரியர்,**
**“லீடர்” சஞ்சிகை,**
முகாமைத்துவ துறை,
வர்த்தக முகாமைத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம

**ஆசிரியர்**
**திரு. ரா. கிஷோகுமார்**
விரிவுரையாளர் (தகுதிகாண்)
முகாமைத்துவ துறை

**ஆலோசனைக் குழு**

**திருமதி. றோ. றாகல்**
சிரேஸ்ட விரிவுரையாளர்

**திருமதி. பா. கென்னடி**
சிரேஸ்ட விரிவுரையாளர்

**திருமதி. எல். டி. விக்ரர்**
சிரேஸ்ட விரிவுரையாளர்

**திரு. ட. பிரபாகரன்.**
சிரேஸ்ட விரிவுரையாளர்

**கணணி நெறியாளர்**

**எஸ். றாகல்**
உதவி விரிவுரையாளர்
முகாமைத்துவத் துறை

# உள்ளடக்கம்

1. கொள்முதல் மேலாளர் சுட்டி

**ஷாமினி நியூட்டன்**
**உதவி விரிவுரையாளர்**
**கிழக்கு பல்கலைக்கழகம்**

2. பசுமை மனிதவள முகாமைத்துவம்

**சௌம்யா குழந்தைவடிவேல்**
**உதவி விரிவுரையாளர்**
**கிழக்கு பல்கலைக்கழகம்**

3. சர்வதேச வர்த்தகம்

**செலோமியா றாகல்**
**உதவி விரிவுரையாளர்**
**கிழக்கு பல்கலைக்கழகம்**

4. இலத்திரனியல் வங்கி

**பைசல் அன்டனட் சாமிளா**
**உதவி விரிவுரையாளர்**
**கிழக்கு பல்கலைக்கழகம்**

# கொள்முதல் மேலாளர் சுட்டி
# (Purchasing Managers Index – PMI)

**ஷாமினி நியூட்டன்**
**உதவி விரிவுரையாளர், வர்த்தக முகாமைத்துவப் பீடம்**

கொள்முதல் மேலாளர் சுட்டியானது பொருளாதார ஆரோக்கியத்தை பிரதிபலிக்கும் ஒரு குறிகாட்டியாகும். இலங்கையில் PMI சுட்டியானது இலங்கை மத்தியவங்கியின் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் 2015 மே மாதத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டு தொடர்ச்சியாக கணிப்பிடப்பட்டு வருகின்றது. இதன் பிரதான நோக்கம் உற்பத்தித்துறையின் செயற்திறனை அளவிடுவதாகும், இதற்காக இலங்கையின் முன்னணியில் உள்ள ஏறத்தாழ 150 தொழிற்துறை நிறுவனங்கள் கணக்கெடுப்பிற்கு உட்படுத்தப்படுகின்றது.

சர்வதேச ரீதியாக கொள்முதல் மேலாளர் சுட்டி (PMI) இனைக் கணிப்பிட இரண்டு முன்னணி நிறுவனங்கள் காணப்படுகின்றன. அவையாவன வழங்கல் மேலாண்மை நிறுவனம் ( Institute of Supply Management - ISM) இது இலாப நோக்கமற்ற நிறுவனம் என்பதோடு இதில் 40,000 ற்கும் மேற்பட்ட நிறுவனங்கள் அங்கத்துவம் வகிக்கின்றன. இந் நிறுவனமானது 1948ம் ஆண்டு அமெரிக்காவை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டு தற்போது உலகளாவிய ரீதியில் வணிக நடவடிக்கைகளை மிக நெருக்கமாக அவதானிக்கப் பயன்படுத்தப்படும் குறிகட்டியாக உள்ளது. அடுத்ததாக முன்னணியிலுள்ள PMI கணிப்பீட்டு நிறுவனம் Markit Group ஆகும். இப் PMI குறிகாட்டியானது கம்பனிகள், நாடுகளைப் பொறுத்து அவை பிரசுரிக்கப்படும் இடங்கள் வேறுபடுகின்றன. உதாரணமாக ISM அத்தோடு Markit இரு நிறுவனங்களும் அமெரிக்காவிற்கான PMI குறிகாட்டியை வெளியிடும் பொறுப்பைக் கொண்டுள்ளது.

PMI ஆனது ஐந்து துணைக் குறிகாட்டிகளின் ஒரு கூட்டுக் குறியீடாகும். புதிய கொள்வனவு வேண்டுகோள் (New orders), சரக்கு அளவுகள் (Inventory level), உற்பத்தி வழங்குனர் கிடைப்பனவு (Supplier deliveries) வேலைச் சூழல் (employment environment) போன்ற முக்கிய 05 துணைக்குறிகாட்டிகளை உள்ளடக்கியுள்ளது. PMI கணிப்பீட்டின் பிரதான நோக்கமானது முகாமையாளர்கள், ஆய்வாளர்கள் ஏனைய அக்கறையுடைய தரப்பினர்க்கு தற்போதைய வணிக நிலைமைகள் தொடர்பாக தீர்மானம் மேற்கொள்ளத் தேவையான தகவல்களை வழங்குவதாகும். குறிப்பாக PMI ஆனது முக்கியமான முகாமைத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு பல்வேறு வழிகளாலும் பங்களிப்புச் செய்கின்றது. உதாரணமாக கம்பனிகள் PMI பெறுபேறுகளை தமது ஆண்டு வரவு செலவுத் திட்டம், ஊழியர்மட்டத் தீர்மானம், காசுப்பாய்ச்சல் திட்டமிடலில் பயன்படுத்துகின்றன.

அநேகமாக பொருளாதார குறிச்சுட்டியானது கடந்தகால வராற்றுத் தகவல்களின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டு தீர்மானம் மேற்கொள்வதில் பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் PMI சுட்டியானது

கணக்காய்வின் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டு தற்போதைய எதிர்காலம் தொடர்பான கண்னோட்டத்தைப் பிரதிபலிப்பதால் முதலீட்டாளர்களின் முதலீட்டு தீர்மானம் எடுத்தலில் பெறுமதி சேர்க்கின்றது. மேலும் PMI ஆனது உற்பத்திக்துறை சேவைத்துறைக்கு மட்டுமல்லாது ஒட்டுமொத்தப் பொருளாதாரத்திற்கும் முக்கிய குறிகாட்டியாக அமைகின்றது.

ஏனெனில் மொத்த தேசிய உற்பத்தியில் (GDP) உற்பத்தி சேவைத்துறையின் பங்களிப்பு பெரும்பான்மை வகிக்கின்றது. ஆகவே உற்பத்தி சேவைகள் துறையில் ஏற்படும் சிறிய வீழ்ச்சி மொத்த தேசிய உற்பத்தியில பாரிய பின்னடைவை ஏற்படுத்தும் என்பதால் அவை மிக நெருக்கமாகவும் துல்லியமாகவும் அவதானிக்கப்பட்டு வருகின்றன.

PMI கணிப்பீட்டு முறையானது பின்வருமாறு காட்டப்படுகின்றது. இங்கு கணக்கெடுப்பு ஆய்வானது ஒவ்வொரு மாத அடிப்படையிலும் ஒவ்வொரு முறையும் வணிக தொழிற்துறையின் ஒப்பனையைப் பிரதி நிதித்துவப்படுத்தும் மேலாளர்களிடமிருந்து வாக்குப் பதிவு இடம்பெற்று பெறுபேறுகள் கணிக்கப்படும். இங்கு தரவு சேகரிப்பிற்கு உட்படுத்தப்படும் மேலாளர்கள் தெரிவு செய்யபட்ட துறையின் பொருளாதாரத் தரவுகளை அதிகார பூர்வமாக வெளியிடக் கூடியவர்களாக மிகத்துல்லியமான முறையில் தெரிவு செய்யப்படுகின்றனர்.

இங்கு தேவையான தரவுகள் பரஸ்பர முறையில் கணக்கெடுப்பின் மூலம் சேகரிக்கப்படுவதோடு, கணக்காய்விற்கு உட்படுத்தப்படும். மேலாளர்க்கு ‘‘**சிறந்தது-** improvement” ‘‘**அதே**- no change’’ ‘‘**மோசமான-** deterioration’’ என மூன்ற விருப்பத் தேர்வுகள் மாத்திரம் வழங்கப்படும். இங்கு PMI எண்ணிக்கை 0 – 100 வரை காணப்படும்.

பெறப்படும் தரவுகளின் அடிப்படையில் PMI கணிப்பானது பின்வருமாறு அமையும்.

$$PMI = (P_1 x1) + (P_2 x0.5) + (P_3 x0)$$

இங்கு,

$P_1$ – முன்னேற்றம் உன்னதமாக / ‘‘சிறந்தது’’ என அறிக்கையிட்டோர் வீதம்

$P_2$ – ‘‘அதே’’ / மாற்றமில்லை என அறிக்கையிட்டோர் வீதம்.

$P_3$ – ‘‘பின்னடைவு’’ / மோசமானது என அறிக்கையிட்டோர் வீதம்.

இதில்,

100%ஆய்விற்குட்படுத்தப்பட்டோர் ‘‘முன்னேற்றம்’’ எனப் பதிவிட்டால் PMI குறிகாட்டி - 100

100%ஆய்விற்குட்படுத்தப்பட்டோர் ‘‘பின்னடைவு’’ எனப் பதிவிட்டால் PMI குறிகாட்டி - 0

100%ஆய்விற்குட்படுத்தப்பட்டோர் ‘‘மாற்றமில்லை’’ எனப் பதிவிட்டால் PMI குறிகாட்டி -50

இங்கு கொள்வனவு மேலாளர்களிடம் இருந்து சேகரிக்கப்படும் தரவானது புவியியல், தொழில்துறை பல்வகைப்படுத்தல் வேறுபாட்டினை பிரதிபலிப்பதோடு, PMI குறிகாட்டி 50ஆக பதிவிடப்படும் போது அங்கு ‘‘முன்னேற்றம்’’ அதே போல் ‘‘பின்னடைவு’’ நிலைமையில் உள்ள வணிக நிறுவனங்கள் சம எண்ணிக்கையில் உள்ளனர் என்பதைக் குறிக்கின்றது.

மேலும் PMI குறிகாட்டியினை அடிப்படையாகக் கொண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) வளர்ச்சியினை எதிர்வுகூறும் போது PMI குறிகாட்டியானது 42 ஆக அல்லது அதற்கு அதிகமாக உள்ளபோது பொருளாதார விரிவாக்கத்தைப் பிரதிபலிக்கின்றது. மறுபக்கம் நோக்குமிடத்து, 42 இற்கு குறைவான தொடர்ச்சியான PMI குறிகாட்டியானது பொருளாதார மந்தநிலையை பிரதிபலிக்கின்றது. அதே போல் 42 இற்கும் 50 இற்கும் இடையேயான வித்தியாசம் ஒரு பொருளாதார மீட்சியின் வலிமையைக் குறிக்கின்றது. இவ்வாறாக PMI சுட்டியானது திட்ட விரிவாக்க கோல்களாக தொழிற்படுகின்றது.

ஒவ்வொரு மாதமும் பெறப்படும் PMI குறிகாட்டி வாசிப்பானது முன்னைய மாதத்தின் குறிகாட்டி வாசிப்புடன் ஒப்பிடப்பட்டு வளர்ச்சிவீதம் விபரிக்கப்படும். உதாரணமாக சென்ற மாதத்தைவிட இம்மாத PMI குறிகாட்டி வீதமானது அதிகமாக இருக்குமிடத்து பொருளாதார விரிவாக்கம் இம்மாதம் அதிகரித்த வீதத்தில் இடம்பெற்றுள்ளது எனக் குறிப்பிடலாம்.

அநேக நாடுகளின் மத்தியவங்கிகளானது வட்டி வீதங்கள் மீதான தீர்மானம் எடுத்தலில் PMI குறிகாட்டியினை பயன்படுத்துகின்றது. மேலும் முதலீட்டார்களினாலும், பிணைகள் சந்தையினால் மிக அவதானமாக இப் PMI குறிகாட்டியானது உற்று நோக்கப்பட்டு வருகின்றது. ஒரு ஆரோக்கியமான PMI குறிகாட்டியானது முதலீட்டாளர்களுக்கு குறித்த நாட்டு பொருளாதாரம் தெடார்பான சாதக குறியினை பிரதிபலிப்பதோடு முதலீட்டாளர்களை கவர்ந்திழுக்கின்றது.

PMI குறிகாட்டியின் பலம் (Strengths)

- மிகவும் சரியான நேரத்தில், கணக்கெடுப்பிற்கு உட்படுத்தப்படும் மாதத்தின் அடுத்த முதல் நாளிலேயே வெளியிடப்படுதல்.
- மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) தொழிலாளர் புள்ளியியல் விபரம், உற்பத்தி அறிக்கைகள் போன்றவற்றின் எதிர்கால வெளியீடுகளின் ஒரு முன் கணிப்பு குறிகாட்டியாக தொழிற்படல்.
- வணிக வல்லுனர்கள் (Professionals) தமது விவரண கருத்துக்களை எதிர்வு கூறுவதற்கு ஒரு முன்னோக்கு குறிகாட்டியாக அமைதல்.
- ஒவ்வொரு மாதந்த அறிக்கையிலும் சரக்கு, விலை போன்ற துணைக் குறிகாட்டிகளின் நீண்டகால போக்குகளில் ஏற்படும் மாற்றம் வெளியிடப்பட முடியும்.

இதன் மூலம் ஒவ்வொரு தனிப்பட்ட துணைக்குறிகாட்டிகளினதும் வழங்கல் விநியோக இறுக்கம், சரக்கு, விலை நிலைமைகளை முந்தையை மாதத்துடன் ஒப்பீடு செய்து எதிர்வரும் காலங்களின் போக்குகளை (trend) எதிர்வு கூறமுடியும்.

மிகப் பிரதானமாக PMI குறிகாட்டிகள் இரண்டு பெரும் துறைகளில் காணப்படுகின்றது. அவையாவன. உற்பத்தி PMI மற்றும் சேவைகள் PMI ஆகும். இவ்விரு துறைகள் மீதான PMI குறிகாட்டியானது அமெரிக்கா உள்ளடங்கலாக யூரோ வலய அங்கத்துவ நாடுகள் உட்பட உலகம் முழுவதும் பலபிற நாடுகளில் கணிப்பிடப்பட்டு வருகின்றது அவற்றுள் இலங்கை நாடும் ஒன்றாகும்.

இலங்கை மத்தியவங்கி அறிக்கையின்படி இறுதியாக வெளியிடப்பட்ட PMI குறிகாட்டியானது மே மாதம் 2017 ஆகும். இது ஏப்ரல் 2017 இற்கான PMI ஆய்வுத் தகவல்களை வெளிப்படுத்தி நிற்கின்றது. உற்பத்தி PMI , சேவைகள் PMI தொடர்பாக PMI குறிகாட்டி தகவல்கள் தெளிவாக கீழ்வரும் அட்டவணை வரைபுகளில் தொடர்புபடுத்தப்படுகின்றது.

**இலங்கை PMI ஆய்வு – ஏப்ரல் 2017**

அட்டவணை1: உற்பத்தி, சேவைகள் தொடர்பாக PMI குறிகாட்டி

| | Y\M | Jan | Feb | Mar | Apr | May | Jun | Jul | Aug | Sep | Oct | Nov | Dec |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| PMI Manufacturing | 2015 | n.a. | n.a. | n.a. | n.a. | 67.3 | 57.5 | 55.5 | 56.5 | 53.2 | 57.8 | 54.8 | 57.9 |
| | 2016 | 51.9 | 55.3 | 60.7 | 41.6 | 47.9 | 55.1 | 50.6 | 53.5 | 57.7 | 56.5 | 58.4 | 58.3 |
| | 2017 | 56.2 | 57.1 | 66.5 | 41.8 | - | - | - | - | - | - | - | - |
| PMI Services | 2015 | n.a. | n.a. | n.a. | n.a. | 66.8 | 65.0 | 60.6 | 59.8 | 61.7 | 59.5 | 59.3 | 60.2 |
| | 2016 | 58.0 | 59.3 | 61.6 | 54.7 | 58.1 | 56.3 | 57.8 | 61.2 | 57.7 | 59.3 | 59.7 | 59.8 |
| | 2017 | 57.5 | 57.3 | 60.8 | 54.2 | - | - | - | - | - | - | - | - |

மாதிரி ஆய்விற்கான மாதிரிகளானது EPF திணைக்களத்தினூடாக தென்மாகாண கம்பனி பட்டியலிலிருந்து பெறப்பட்டது. மேலும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பங்களிப்பை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தி மற்றும் சேவைக்கான மாதிரிகள் 100இற்கு குறையாத பதில்கள் (Response) ஊடாகப் பெறப்பட்டது.

**உற்பத்தித்துறை PMI**




உரு1: உற்பத்தித்துறை PMI

பருவகால மாற்றத்தின்படி 2017 ஏப்ரல் மாதத்திற்கான PMI குறிகாட்டி 41.8 ஆக பதிவாகியுள்ளது. இது March மாதத்தைவிட 24.7 தால் குறைவடைந்துள்ளது. இது மார்ச் மாதத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைக் காட்டுகின்ற அதேவேளை ஏப்ரல் 2017 இற்கான உற்பத்தியில் பாரிய சரிவு / பின்னடைவினை குறித்து நிற்கின்றது. மேலும் PMI இன் துணைக் குறிகாட்டிகளும் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியினையே சுட்டுகின்றது. மேலும் துணைக் குறிகாட்டிகளால் வழங்குனர் விநியோகம் (supplier delivery) தவிர்ந்த ஏனைய துணைக்குறிகாட்டிகள் நடுநிலை 50 இனை விடக்குறைவாகவே பதிவாகியுள்ளதை ஏப்ரல் 2017 இல் சுட்டி நிற்கின்றது.

**சேவைத்துறை PMI**

சேவைத்துறை PMI ஆனது மார்ச் 2017இல் 60.8 இலிருந்து 54.2 ஆக ஏப்ரல் மாதம் பதிவாகியுள்ளது. இவ்வீழ்சியானது கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் ஏப்ரல் 2017, மாதத்திற்கான சேவைகள் துறைகள் மீதான பொருளாதார நாடவடிக்கையில் ஒரு சாவினைப் பிரதிபலிக்கின்றது.




உரு2: சேவைத்துறை PMI

இவ் பொதுவான பொருளாதார விரிவாக்கத்திற்கு புதிய வணிகம், வணிக செயற்பாடுகள் அவற்றின் அதிகரிப்பு என்பன பங்களிப்புச் செய்கின்றன. மேலும் அதிகமான கவனம் செலுத்த வேண்டிய விடயம் என்னவெனில் இலங்கையின் PMI ஆய்வு 2015 மே மாதம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து முதல் தடவையாக துணைக் குறிகாட்டியான வேலைவாய்ப்பு 50 இற்கு குறைவாக பதிவாகியுள்ளது.

Remarks – முக்கிய குறிப்பு:

- கொள்முதல் மேலாளர் குறிகாட்டி என்பது ஒரு பொருளாதாரக் குறியீடாகும். அது குறிப்பிட்ட துறையில் உள்ள வணிகங்களின் மேலாளர்களை ஆய்வுக்குட்படுத்தி பெறப்படுவதாகும்.
- பொதுவாக PMI குறிகாட்டி வாசிப்பானது 42ம் அதற்கு மேற்பட்டதும் பொருளாதார விரிவாக்கத்தை பிரதிபலிக்கும் போது, 42இற்கு குறைவான வாசிப்பு பொருளாதார மந்த நிலையைப் பிரதிபலிக்கின்றது.
- PMI குறிகாட்டியில் உள்ளடங்கும் தனிப்பட்ட கூறுகள் பணவீக்கம் போன்றவற்றை எதிர்வு கூற மிகப் பயனுள்ளதாகும்.

**உசாத்துணை**


- Central bank press release-2017
- http://www.4-traders.com/news/Central-Bank-of-Sri-Lanka-SL-Purchasing-Managers-Index-PMI-Survey-March-2017--24199975/
- http://economictimes.indiatimes.com/news/economy/indicators/what-is-purchasing-managers-index-pmi/articleshow/6259031.cms

# பசுமை மனிதவள முகாமைத்துவம்

# (Green HRM)

**சௌம்யா குழந்தைவடிவேல்**
**உதவி விரிவுரையாளர், வர்த்தக முகாமைத்துவப் பீடம்**

இன்றைய உலகானது தொழில் துறைமயமாக்கலை நோக்கி நகர்ந்து கொண்டுள்ளது. இது நிறுவன உற்பத்தி, தொழில்நுட்பம் மற்றும் நிறுவன செயற்பாடுகளை துரிதப்படுத்துவதோடு மனிதர்களின் வேலைகளை இலகுபடுத்தி வாழ்க்கை தரத்தையும் உயர்த்துகின்றது. ஆனால் அதற்கு மாறாக சுற்றுப்புற சூழலுக்கு தீங்கு விளைவிப்பதோடு சூழலுக்கு அச்சுறுத்தலையும் ஏற்படுத்துகின்றது. எனவே, இவ்வேளையில் மனிதன் பசுமை பற்றிய நடைமுறைகளை செயற்படுத்தி சுற்றுப்புற சூழலையும் பல்வேறு வகையான அரிய வளங்களையும் பாதுகாக்க விளைகின்றான். இவ்வாறான பசுமைப்படுத்தல் செயற்பாடானது உலக வெப்பமயமாக்கல் மற்றும் இயற்கை அனர்த்தங்களை குறைக்க உதவும் (அமில மழை, சுனாமி, வெள்ளப்பெருக்குஇ வரட்சி), சூழல் மாசடைவினால் ஏற்படக்கூடிய நோய்களை தடுக்கும், இயற்கை உயிரினங்களை பாதுகாக்க உதவும், விலங்குகள், தாவரங்கள், மனிதர்கள் மற்றும் சுற்றுச் சூழல்களுக்கிடையே சமநிலை ஏற்படுத்த உதவும், அத்துடன் மனிதர்களினதும் வணிக நிறுவனங்களினதும் நீடித்து நிற்கும் தன்மையையும் உறுதிப்படுத்துகின்றது. எனவே பசுமையாக்கலானது தனிநபருக்கும், நிறுவனத்துக்கும், சமூகத்திற்கும் பல்வேறு வகைப்பட்ட சூழல்களுக்கும் இன்றியமையாததாக உள்ளது.

குறிப்பாக வணிக சூழலில் பசுமை தொடர்பான முகாமைத்துவம் பரவலாக அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. அதனை வெற்றிகரமாக திட்டமிட்டு ஒழுங்கமைத்து செயற்படுத்துவதில் ஊழியர்களின் பங்கு அதிகம் செல்வாக்கு செலுத்தும் என்பதைக் கண்டறிந்த நிறுவனங்கள் ‘பசுமை மனிதவள முகாமைத்துவம்’ எனும் எண்ணக்கருவை அறிமுகப்படுத்தியது. மனிதவள முகாமைத்துவத்தினுள் பசுமை எண்ணக்கரு தோற்றம் பெற்றமைக்கான முக்கிய காரணங்களாவன வருமாறு, இயற்கை சுற்றுப்புற சூழலை அதன் இயற்கை தன்மை மாறாது பேணல், வருங்கால சந்ததியினருக்காக இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் சூழல் மாசடைதலைத் தடுத்தல் ஆகும். மேலும் நிலைத்து நிற்கக்கூடியவாறாக அருமையான வளங்களைப் பயன்படுத்தி நிலைத்திருக்கும் சுற்றுச்சூழலை கட்டியெழுப்புவதை நோக்காகக் கொண்டு பசுமை மனிதவள முகாமைத்துவம் நிறுவனத்தினுள் செயற்படுத்துவதால் அது ஒரு வினைத்திறன் மிக்க முகாமைத்துவமாகக் காணப்படுகின்றது. எனவே பசுமை மனிதவள முகாமைத்துவம் என்பது தனி நபருக்கும், சமூகத்திற்கும், இயற்கை சுற்றுச் சூழலுக்கும் மற்றும் வணிகத்திற்கும் நன்மை ஏற்படுத்தும் முகமாக நிறுவன ஊழியர்களை பசுமைப்படுத்துவதற்கான கொள்கைகள், செயற்பாடுகள், ஒழுங்குமுறைகள் ஆகும்.

மேலும் மனிதவள முகாமைத்துவத்தின் புதிய பரிமாணமாக பசுமை மனிதவள முகாமைத்துவம் அமைவதோடு பசுமையான ஊழியர்களைக் கவர்ந்து, அபிவிருத்தி அடைய செய்து நிறுவனத்தினுள் நிலைத்து நிற்க செய்ய உதவுகிறது. அதாவது நிறுவனத்தின் சூழல் தொடர்பான இலக்குகளை அடைவதற்காவும், நிலைத்து நிற்கக்கூடிய சுற்றுச் சூழலுக்கு பங்களிப்பு செய்வதற்காகவும் சாதாரண ஊழியர்களை பசுமை ஊழியர்களாக மாற்றம் அடையச் செய்கின்றது. இவ்வாறாக மாற்றுவதற்கு ஊழியர்கள் குறிப்பிடத்தக்க அளவு சுற்றுப்புற சூழல், அதனைப் பாதுகாத்தல் தொடர்பான அடிப்படையான அறிவு மற்றும் திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதபட்சத்தில் ஊழியர்கள் பசுமையாக்கப்படுதல் என்பது சாத்தியமற்றதாகிறது. அத்துடன் நிறுவனத்தின் சூழல் பாதுகாப்பு தொடர்பான செயற்பாடுகளில் பங்களிக்க ஊழியர்கள் சூழல் தொடர்பிலும் அதனை பாதுகாத்தல் தொடர்பிலும் நேரான அணுகுமுறைகளும், நடத்தைகளும் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். இவற்றை ஊழியர்கள் மத்தியில் வளர்த்துக்கொள்ள நிறுவனங்கள் பசுமை மனிதவள முகாமைத்துவ செயற்பாடுகளை பயன்படுத்துகின்றது அவையாவன பசுமை வேலை வடிவமைப்பு, பசுமை மனிதவள திட்டமிடல், பசுமை ஆட்சேர்ப்பு மற்றும் தெரிவு செய்தல், சூழல் பற்றிய பயிற்சியும் அபிவிருத்தியும், பசுமை செயல்திறன் மதிப்பீடு, பசுமை கொடுப்பனவு முகாமைத்துவம் மற்றும் பல. இவை அனைத்தும் ஊழியர்களின் பசுமை செயற்பாடுகளை அபிவிருத்தி செய்வதுடன் நிறுவனத்தின் சூழல் பாதுகாப்பு தொடர்பான இலக்குகளையும் அடைவதற்கு வழிவகுக்கின்றது.

பசமை மனித வள முகாமைத்துவமானது நிறுவன மட்டத்தில் மட்டுமன்றி ஊழியர் மட்டத்திலும் இன்றியமையாததாகின்றது. அதாவது வேலை வாழ்க்கையையும் தாண்டி ஊழியருக்கு தனிப்பட்ட வாழ்க்கையும் உள்ளது. அவை இரண்டையும் சமநிலைப்படுத்தி வாழ வேண்டிய தேவைப்பாடு ஊழியர்களுக்கு உள்ளது. குறித்தநபரொருவர் ஒரு நிறுவனத்திற்கு வேலைத்தளத்தில் உழியராகவும், தனிப்பட்ட வாழ்க்கையில் நுகர்வோராகவும் காணப்படுகின்றார். இவ்வாறு உள்ள போதிலும் பசுமை மனிதவள முகாமைத்துவத்தினால் ஊழியர்களைப் பசுமைப்படுத்தி அவர்களுள் சுற்றுச் சூழலை பாதுகாத்தல் தொடர்பான நடத்தையை ஊக்குவிப்பது அவர்களது வேலை மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையில் நன்மை பயப்பதாக உள்ளது பின்வரும் வழிகளில்,

1. வேலையில் நிறுவனத்தின் சுற்றுச் சூழல் பாதுாகப்பு தொடர்பான இலக்குகளை அடைய உதவுதல்.

2. தனிப்பட்ட வாழ்க்கையில் சூழலை பாதுகாப்பதில் பங்களிப்பு செய்வதன் மூலம் நாட்டிற்கு நல்ல பிரஜையாக இருத்தல்.

மனிதவள முகாமைத்துவ செயற்பாடுகளும் அவை பசுமையாக்கப்படும் முறைகளும் வருமாறு:-

- வேலைப்பகுப்பாய்வு (Job Analysis)
  - தொழில் விபரத்தில் சூழல் பாதுகாப்பு தொடர்பான மாறியை இணைத்தல்.
  - தொழில் நியமத்தில் பசுமை தொடர்பான தகைமையை ஒரு கூறாக இணைத்தல்.
- ஆட்சேர்ப்பு (Recruitment)
  - சூழல் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வை ஆட்சேர்ப்பில் இணைத்துக் கொள்ளல்.
  - ஆட்சேர்ப்பு மூலம் பசுமை ஆக்கல் பற்றிய தொழில்தருனரின் கருத்தை முன்வைத்தல்.
- தெரிவு செய்தல் (Selection)
  - போதியளவு பசுமை பற்றிய விழிப்புணர்வுடன் கூடிய ஊழியர்களை தெரிவு செய்தல்.
  - தனிப்பட்ட வாழ்விலும் ஒரு நுகர்வோராக பசுமை நடத்தைகளை கொண்டவர்களை தெரிவு செய்தல்.
- தொழில் அறிமுக விளக்கம் (Induction)
  - புதிய ஊழியர்களை நிறுவனத்தின் பசுமை தொடர்பான விளக்கம் (Induction) முயற்சிகளுக்கு பழக்கமாக்குதல்/அறிமுகப்படுத்தல்.
  - ஏற்கனவே நிறுவனத்தில் உள்ள ஊழியர்களின் பசுமை தொடர்பான அறிவு, திறன், நடத்தைகளை வெளிப்படுத்த தொழில் அறிமுகத்திற்காக நிகழ்ச்சிகளை ஒழுங்கமைத்தல்.
- பயிற்சி (Training)
  - பசுமை பற்றிய அறிவு மற்றும் திறனை ஊழியர்களுக்கு வழங்கல்.
  - பசுமை பயிற்சி தேவைகளை அடையாளம் காண்பதற்காக பயிற்சி தேவை ஆய்வை மேற்கொள்ளல்.
- செயல்திறன் மதிப்பீடு (Performance Evaluation)
  - பசுமை தொடர்பான நியமத்தை அடிப்படையாகக் கொண்டு ஊழிய செயற்திறனை மதிப்பீடு செய்தல்.
  - செயற்திறன் பின்னூட்டலின் போது பசுமைப்படுத்தலை தனி அம்சமாக இணைத்துக் கொள்ளல்.

| | | |
|---|---|---|
| • கொடுப்பனவு நிதிசார் முகாமைத்துவம் (Rewards Management) | - | ஊழியர்களின் பசுமை செயற்திறனை ஊக்குவிக்க நிதிசார் முகாமைத்துவம் கொடுப்பனவுகளை வழங்கல். |
| | - | ஊழியர்களின் பசுமையாக்கல் நடவடிக்கைகளுக்காக நிதிசார அல்லாத வெகுமதிகளை வழங்கல். |
| • ஒழுக்க நிர்வாகம் (Discipline Administration) | - | பசுமையாக்கலுடன் தொடர்பான ஒழுங்கு விதிகளை முறைமைப்படுத்தல். |
| | - | பசுமையாக்கல் ஒழுங்கு விதிகளை மீறுவொர் தொடர்பில் ஒழுக்க நடவடிக்கை எடுத்தல். |

மேற்குறிப்பிடப்பட்டவாறு மனிதவள முகாமைத்துவமானது அதன் செயற்பாடுகளான தொழில் உருவாக்கத்தில் இருந்து ஊழியர் தொடர்பு வரை அனைத்து செயற்பாடுகளிலும் பசுமையாக்கலை அமுல்படுத்தி அதன் மூலம் நிறுவனத்தையும் அதன் சகல கருமங்களையும் 'பசுமை' எனும் எண்ணக்கருவை நோக்கி நகரச் செய்கின்றது. இதில் மனிதவள துறையில் உயர்மட்டத்தில் உள்ளோருக்கு நிறுவனத்தை பசுமையாக்குவது மிகவும் சவால் நிறைந்த ஒன்றாக உள்ளது. இத்தகைய சவால்களை வெற்றி கொள்வது நிறுவனத்தின் சூழல் சார்ந்த செயற்திறனை அதிகரிக்க செய்யும். அதாவது பசுமை மனிதவள முகாமைத்தவச் செயற்பாடுகள் நிறுவனத்தில் எதிர்மறையான சூழல் தாக்கத்தைக் குறைப்பதோடு நிறுவனத்தில் நேர் மறையான சூழல் தாக்கத்தை அதிகரிக்கவும் செய்கின்றது. இவ்வாறாக சூழல் சார்ந்த செயற்திறனை அதிகரிப்பதில் மனிதவளம் முக்கிய பங்கு வகிக்கின்றது. எனவே பசுமை மனிதவள முகாமைத்துவமானது ஒரு தனிநபரையும், நிறுவனத்தையும், சுற்றுப்புற சூழலையும் பசுமையாக்குவதன் மூலம் நிறுவனத்தின் சூழல் சார்ந்த செயற்திறனை அதிகரித்து நிறுவனத்தின் நீண்டகாலமாக நிலைத்திருக்கக் கூடிய ஸ்திர தன்மைக்கு வழிவகுக்கும்.

**உசாத்துணை**


- Opatha, H.H.D.N.P., & Arulrajah, A.A. (2014). Green Human Resource Management: Simplified General Reflections. International Business Research, 7(8), 101 – 112.
- https://graduateway.com/green - hrm/

# சர்வதேச வர்த்தகம்

# (International Trade)

**செலோமியா றாகல்**
**உதவி விரிவுரையாளர், வர்த்தக முகாமைத்துவப் பீடம்**

ஒவ்வொரு நாடும் தமக்கென்று தனித்துவமான இயற்கை வளங்கள் சொத்துக்கள் மற்றும் அதன் நன்மைகளை தம்மகத்தே கொண்டுள்ளன. வளங்கள் மட்டுப்படுத்தப்பட்டவை. ஆனால் தேவைகளும் விருப்பங்களும் மட்டற்றவை. அவற்றை பூர்த்தி செய்யும் பொருட்டு காணப்படும் வளங்களானது நாட்டிற்கு நாடு வேறுபட்டு காணப்படுகிறது. இதனால் நாடுகளாவன இந்த பிரச்சனைகளை கடந்து செல்ல சர்வதேச வர்த்தகத்தை பயன்படுத்துகின்றன.

பொதுவாக சர்வதேச வர்த்தகமானது சர்வதேச எல்லைகள் பிராந்தியங்கள் முழுவதுமான பொருட்கள் மற்றும் சேவைகளின் பரிமாற்றத்தை குறிக்கின்றது. சர்வதேச வர்த்தகமானது பெரும்பாலான நாடுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கணிசமான பங்கை வகிக்கிறது. 2010ல் சர்வதேச வர்த்தகமானது உள்நாட்டு உற்பத்தியில் 30% ஆக காணப்பட்டது. அதாவது உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளில் 1/3 பங்கானது உலகெங்கிலும் சர்வதேச ரீதியில் பரிமாற்ற படுகின்றது.

“Global Policy Fourm” இன் கணிப்பின் படி 2030ம் ஆண்டளவில் உலக பொருளாதாரத்தில் 60% ஆனது சர்வதேச ரீதியில் பரிமாற்றப்படும். ஒவ்வொரு நாட்டினது தேசிய பொருளாதாரத்திலும் தமது சொந்த உள்நாட்டு பொருளாதாரத்தின் பங்கை விட சர்வதேச வர்த்தகத்தின் பங்கானது அதிகமாக காணப்படும். இவ்வாறான சந்தர்ப்பத்தில் உள்நாட்டு பொருளாதாரமானது உலகலாவிய ரீதியில் ஏற்படும் பொருளாதார மாற்றங்களால் வெகுவாக பாதிப்படையும். ஒரு நாட்டின் வருமானம், வேலைவாய்ப்புக்கள் சம்பளங்கள் நாட்டின் வளர்ச்சி மற்றும் நாட்டின் அபிவிருத்தி என்பன உள்நாட்டு விளைவுகளால் மட்டுமன்றி உலக பொருளாதாரத்தின் நிலைப்பாட்டினாலும் தீர்மானிக்கப்படும். இதனால் சர்வதேச வர்த்தகம் மற்றும் பொருளாதாரம் தொடர்பான ஒரு அறிமுகம் எந்தவொரு பொருளாதாரத்திற்கும், பொருளாதாரம் தொடர்பாக விவாதிக்கும் எந்தவொரு நபருக்கும் இன்றியமையாதவொன்றாகும்.

சர்வதேச வர்த்தகமானது நாட்டின் பௌதீக வளங்களை உகந்த முறையில் வினைத்திறனுடன் பயன்படுத்த உதவுகின்றது. இதனால் ஒரு நாடானது தம்மிடம் இருக்கும் வளத்தை கொண்டு எந்த உற்பத்தியை வினைத்திறனாக உற்பத்தி செய்ய முடியுமோ அவ்வுற்பத்தியில் தமது முழுக் கவனத்தையும் செலுத்த எத்தனிக்கிறது.

சர்வதேச வர்த்தகத்தின் மூலம் இன்று ஒரு நாட்டில் உற்பத்தி செய்வதற்கான சாத்தியங்கள் இல்லாத பொருட்களையும் அந்நாட்டில் உள்ளவர்கள் பெற்றுக்கொள்ளக் கூடியதாக காணப்படுகிறது. இது ஏற்றுமதி பரவலாக்கத்தை எளிதாக்கி வளர்ச்சியடைந்துவரும் நாடுகளுக்கு

வாய்ப்பளிப்பதன் மூலம் புதிய சந்தைகளையும் புதிய பொருட்களையும் அணுகக்கூடிய வாய்ப்பு கிடைக்கின்றது. சர்வதேச வர்த்தகமானது தேவையற்ற தடைகளை நீக்கி ஏற்றுமதியை இலகுவாக்குவதன் மூலம் உள்ளுர் நிறுவனங்களுக்கு புதிய சந்தை வாய்ப்புக்கள் ஏற்படுத்தப் படுகின்றன. இதனால் சர்வதேச ரீதியான போட்டி நாடுகளுக்கிடையேயும் நிறுவனங்களுக்கிடையிலும் அதிகரிப்பதுடன் சந்தைக்கு தரமான பொருட்களை குறைவான செலவில் தயாரித்து விநியோகிக்க முடிகிறது.

மேலும் சர்வதேச வர்த்தகமானது நாடுகளுக்கிடையிலான உறவுகளை வலுப்படுத்தி அதன் மூலம் அமைதி மற்றும் பரஸ்பர நன்மை பரிமாற்றத்தால் மக்களை ஒன்றுபடுத்துகிறது. பொருளாதார துறைகளை உயர்த்துவதன் மூலம் இது தொழிற்துறைகளையும் தொழில் வாய்ப்புக்களையும் உருவாக்குவதால் வருமான அளவையும் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்துகிறது. இவ்வாறு பல நன்மைகள் சர்வதேச வர்த்தகத்தில் காணப்படுகிற போதிலும் அதன் தீமைகளும் ஆபத்துக்களும் தவிர்க்கப்பட முடியாதவை. சர்வதேச வர்த்தகத்தின் வளர்ச்சியால் உள்நாட்டு கைத்தொழில்கள் ஒரு மோசமான விளைவை எதிர்நோக்கவேண்டியுள்ளது. இது உள்நாட்டில் காணப்படும் புதிய கைத்தொழில்களுக்கு ஒரு பாதிப்பாகவே அமைகிறது. சர்வதேச போட்டியாலும் கட்டுப்பாடற்ற இறக்குமதிகளாலும் உள்நாட்டு தொழில்கள் வீழ்ச்சியடையும்.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் அபிவிருத்தியடைந்த நாடுகளில் தங்கியிருக்க வேண்டிய சூழ்நிலையும் அதனால் அது பொருளாதார சுரண்டலுக்கும் வழிவகுத்து நிற்கிறது. அத்தோடு அதிகமான ஏற்றுமதிகள் ஒரு நாட்டின் இயற்கை வளங்களை குறுகிய காலத்திற்குள் தீர்த்துவிடும் இது நாட்டிற்கு நீண்ட காலத்திற்கு பொருளாதார வீழ்ச்சியை ஏற்படுத்தும். சில நேரங்களில் ஒரு நாட்டில் தேவையான அத்தியவசிய பொருட்கள் குறைவான அளவில் காணப்படும் போதும் வெளிநாட்டு செலாவனியை ஈட்ட ஏற்றுமதி செய்யப்படுவதால் பொருட்களுக்கான பற்றாக்குறை உள்நாட்டில் பணவீக்கத்தை ஏற்படுத்தும்.

சர்வதேச வர்த்தகம் காரணமாக வெளிநாட்டு முகவர்கள் உள்நாட்டில் குடியேறுவதற்கான ஒரு வாய்பை வழங்குவதால் அது இறுதியாக அந்நிய நாடுகளுடனான சமதானத்தை பாதிக்கலாம் சர்வதேச வர்த்தகத்தில் நிலவும் போட்டிகாரணமாக நாடுகளுக்கு இடையிலான யுத்தங்களுக்கு இவை வழிவகுத்து உலக சமாதானத்தை நிலைகுலைக்கலாம். ஒரு நாட்டில் ஒப்பிடக்கூடியளவு விலை நன்மைகளை கொண்டிருக்கும் பொருட்களால் மட்டுமே சர்வதேச வர்த்தகம் ஒரு நாட்டில் வளர்சிக்கு உதவுகிறது. நாடுகளுக்கிடையே நல்ல உறவுகள் இல்லாதபட்சத்தில் பல கஷ்டங்கள் தொடரலாம். நாடுகளுக்கு நாடு வளங்கள் வேறுபட்டிருப்பதாலும் வரையறுக்கப்பட்டிருப்பதாலும் எந்தவோரு நாடும் தமக்கு தேவையான அனைத்தும் பொருட்கள் மற்றும் சேவைகளை தாமாகவே உற்பத்தி செய்து கொள்ள முடிவதில்லை அவ்வாறான தன்னிறைவு பொருளாதாரத்திற்கான சாத்தியகூறுகளை தற்போது இவ் உலகத்தில் காணமுடிவதில்லை இதற்காக ஒவ்வோரு நாடும் ஏனைய நாடுகளில் தங்கியிருக்கவேண்டிய நிலை காணப்படுகின்றது. இந் நிலையை சர்வதேச வர்த்தகம் மூலமே நிவர்த்தி செய்து கொள்ளக்கூடியதாக உள்ளது.

சர்வதேச வர்த்தகமானது பல்வேறு நன்னைகளையும் தீமைகளையும் தம்மகத்தே கொண்டிருக்கும் போதும் எந்தவோரு நாடும் சர்வதேச வர்த்தகத்தில் விரும்பாமலோ ஈடுபட

வேண்டிய ஒரு கட்டாயத்தில் உள்ளது. ஒரு நாடு சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடாவிட்டால் அது நாட்டின் பொருளாதாரத்தை பாதிப்பதோடு அந்நாட்டு மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய இயலாத நிலைக்கு தள்ளப்படும். ஆகவே இன்றைய சூழ்நிலையில் சர்வதேச வர்த்தகமானது இன்றியமையாத ஒன்றாக காணப்படுகின்றது.

**இலங்கையில் சர்வதேச வர்த்தகம்**

இந்து சமுத்திரத்தில் இலங்கையின் அமைவிடமானது சீனாவிற்கும் ஐரோப்பாவிற்குமான கடல்வழிப் பாதையின் மத்தியில் காணப்படுவதனால் பண்டைய காலத்து வர்த்தகத்திற்கு ஒரு மையமாக அமைந்திருந்தது. வரலாற்று ஆதாரங்கள் மற்றும் தொல்பொருள் சான்றுகளிலிருந்து கி.மு 8வது நூற்றாண்டிலிருந்து சர்வதேச வர்த்தக தொடர்புகள் காணப்பட்டதை விளங்கிக் கொள்ளலாம். இலங்கை கிழக்காசியாவின் மிகப் பெரிய வர்த்தக கேந்திர நிலையங்களில் ஒன்றாக காணப்பட்டது. வணிகர்கள் ஏற்றுமதிக்காகவும் பரிமாற்றத்திற்காகவும் பொருட்களை இறக்குமதி செய்தனர்.

17ம் நூற்றாண்டில் நொக்ஸின் கூற்றுப்படி பண்டைய காலத்தில் பல்வேறு வகையான பட்டுக்கள், பருத்தி, பீங்காண்கள், பல்வேறு வகையான மருந்துகள், கற்பூரம், கண்ணாடி போத்தல்கள் முதலிய பல்வேறு பொருட்கள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டன. விலைமதிப்பற்ற கற்கள், முத்துக்கள், யானைகள், யானைத்தந்தம், ஆமையோடுகள், பெறுமதியான மரங்கள், துணி மற்றும் வாசனைத்திரவியம் போன்ற பெறுமதிமிக்க பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. காலனித்துவ சகாப்தத்தில் கோப்பி, தேயிலை, ரப்பர் போன்ற நாணய பயிர்கள் முக்கியமாக ஏற்றுமதிக்காகவே பயிரிடப்பட்டன.

1970 களின் பிற்பகுதியளவில வர்த்தக தாராளமயமாக்கல் முன்வைக்கப்பட்டதுடன் தொடர்ந்து அனைத்து அரசுகளாலும் தொடரப்பட்டு வருகின்றது. தற்போது இலங்கையானது தெற்காசியாவின் முழுப்பிராந்தியத்திலும் மிகவும் தாராளமயமாக்கப்பட்ட பொருளாதாரங்களில் ஒன்றாக அறிப்படுகிறது. வெளிநாட்டு வர்த்தக கொள்கையானது உள்நாட்டு தொழில் நலங்களை சமநிலையில் வைத்திருப்பன் மூலம் உலக பொருளாதாரத்துடன் இலங்கையை ஒருங்கிணைப்பதை நோக்கமாக கொண்டு நாட்டின் தற்போதைய வர்த்தக ஆட்சியை மேலும் தாராளமயமாக்குவதற்கான செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுக்கிறது.

**இலங்கையின தற்போதைய ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள் பின்வருமாறு**

**இலங்கையின் ஏற்றுமதி 30.00 பில்லியன் அமேரிக்க டொலர்கள். (2016 est.)**

**இலங்கையின் ஏற்றுமதிகள்**




**இலங்கையின் பிரதான ஏற்றுமதி பொருட்கள்**

- துணி மற்றும் ஆடைகள்
- தேயிலை மற்றும் வாசணைப்பொருட்கள்.
- வைரங்கள்
- மரகதம்
- மாணிக்கங்கள்
- தெங்கு உற்பத்திகள்
- இறப்பர் உற்பத்திகள
- மீன்

**இலங்கையின் இறக்குமதி 35.00 பில்லியன் அமேரிக்க டொலர்கள். (2016 est.)**

**இலங்கையின் இறக்குமதிகள்**




**இலங்கையின் பிரதான இறக்குமதி பொருட்கள்**

- ஆடைகளுக்கான துணிகள்
- கனிம பொருட்கள்
- பெற்றோலியம்
- உணவுப்பொருட்கள்
- இயந்திரங்கள் மற்றும் வாகனங்கள்

**உசாத்துணை**


- http://www.businessdictionary.com/definition/international-trade.html
- http://gsme.sharif.edu/`trade
- http://www.yourarticlelibrary.com/international-trade/advantages-and-disadvantages-ofinternational trade/42100/
- http://trade.ec.europa.eu/doclib/docs/2012/january/tradoc148991.pdf.
- Slembassyusa.org/trade/sri-lankas-trade-policy/
- http://en.m.wikipedia.org/wiki/Economy_of_Sri_Lanka
- Lankadiva.org/muse04/exhibit/start.html
- www.nationsencyclopedia.com/economies/Asia-and-the-Pacific/Sri-Lanka-INTERNATIONAL-TRADE.html

# இலத்திரனியல் வங்கி

# (E – Banking)

**பைசல் அன்டனட் சாமிளா**
**உதவி விரிவுரையாளர், வர்த்தக முகாமைத்துவப் பீடம்**

மிக அண்மைக் காலம் வரையில் வணிகர்கள் கொடுப்பனவு நடவடிக்கைகளை செய்வதற்கு பரவலாகக் குற்றி நாணயங்கள், தாள் நாணங்கள், காசோலைகள் என்பனவற்றையே பயன்படுத்தி வந்தனர். தற்போதைய காலப்பகுதியில் இலத்திரனியல் விஞ்ஞானமானது அதிசயிக்கதக்க வகையில் வளர்ச்சியடைந்ததன் காரணமாக கணினி, தொலைதொடர்புச்சேவை போன்ற துறைகளில் ஏற்பட்ட ஒன்றிணைந்த முன்னேற்றம் காரணமாக வங்கி வாடிக்கையாளர்களுக்கு விரைவாக நிதி கொடுக்கல் வாங்கல்களை வழங்குவதற்காக இத்திரனியல் வங்கிச்சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது.

இணையத்தையும் இணையத்திதிலுள்ள நவீன இலத்திரனியல் சாதனங்களையும் பயன்படுத்தி வங்கியானது தனது வாடிக்கையாளர்களுக்கு விரைவானதும் இலகுவானதுமான வங்கிச்சேவையினை வழங்குவது இலத்திரனியல் வங்கி என அழைக்கப்படும். இதனை நாம் இலத்திரனியல் *"நிதி பரிமாற்றம்"* எனவும் அழைக்கலாம். இரத்திரனியல் வங்கி மூலமாக வாடிக்கையாளர்கள் 24 மணித்தியாலமும் ஏழு நாட்களும் வங்கிச்சேவையினை எங்கிருந்தாலும் வங்கிக்கு செல்லாது இணையத்தின் மூலமாக பெற்றுக்கொள்ளலாம். நேரடி காசு மற்றும் காசோலை மூலமான பணப்பரிமாற்றத்தினை விட இலத்திரனியல் மூலமான பணப்பரிமாற்றம் இலகுவானதாகவும் விரைவானதாகவுமுள்ளது. இன்றைய காலகட்டத்தில் வங்கியானது பல்வேறு வழிமுறைகளில் இலத்தினியல் வங்கிச்சேவையினை நடைமுறைப்படுத்தி வருகின்றன. அவையாவன,

1. தன்னியக்க ரெலர் அட்டை (ATM Card)
2. தொலை வங்கி (Tele Banking)
3. வரவட்டை (Debit Card)
4. கடனட்டை (Credit Card)
5. இலத்திரனியல் காசோலை (E- Cheque)

## தன்னியக்க ரெலர் அட்டை (ATM Card):

வங்கியில் வரிசையில் நின்று தமது வங்கிக் கணக்கிலுள்ள பணத்தினை வாடிக்கையாளர்கள் மீளப்பெறுவதனை குறைப்பதற்காக வங்கியானது ATM சேவையினை அறிமுகப்படுத்தியுள்ளது. கணனிமயப்படுத்தப்பட்ட இயந்திரத்தின் உதவியுடன் சுயமாக

வாடிக்கையாளர்கள் வங்கிக்கு செல்லாது பணம் வைப்பு செய்தல், மீளெடுத்தல், கணக்குகளுக்கிடையே பணம் மாற்றீடு செய்தல் போன்ற கருமங்களை மேற்கொள்ளலாம்.

இவ்வியந்திரமானது மக்கள் கூடும் ஒரு பொதுவான அல்லது பிரசித்தமான இடத்தில் வங்கிகளினால் நிறுவப்பட்டுள்ளதுடன் 24 மணித்தியாலமும் ஏழு நாட்களும் வங்கிச்சேவையினை பெறக்கூடியதாகவுமுள்ளது. தானியங்கி பணம் வழங்கும் இயந்திரமானது இத்திரனியல்மயப்படுத்தப்பட்ட ஒரு பாதுகாப்பான தொலைத்தொடர்பு சாதனமாக வங்கிக்கும் வாடிக்கையாளருக்குமிடையில் காணப்படுவதுடன் வாடிக்கையாளர்கள் தமது வங்கி கணக்கு மீதியினை அறிய, பணத்தினை மீளப்பெற, பணம் மற்றும் காசோலையினை வைப்பிலிட பணப்பிமாற்றத்தினை மேற்கொள்ள உதவுவதுடன் மாதாந்த கொடுப்பனவுகளையும் செலுத்தக்கூடியதாகவுமுள்ளது.

ATM அட்டையானது ஒரு பிலாஸ்டிக் அட்டைபோல் காணப்படுவதுடன் இதில் காந்த புலமுள்ள ஒரு பகுதி (Megnatic Tripe) காணப்படுகின்றது. இதில் வங்கி கணக்குரிமையாளரின் கணக்கிலக்கம், வங்கியின் பெயர், அட்டை உரிமையாளரின் பெயர், அட்டையை இனங்காணக்கூடிய வியாபார பெயர், அட்டையின் இலக்கம் , வழங்கப்பட்ட திகதி என்பன உள்ளடங்கியிருக்கும். மேலும் வங்கியினால் வழங்கப்படும் தனிநபர் அடையாள இலக்கத்தினூடாக (PIN Number) வாடிக்கையாளர்கள் தமக்கு தேவையான வங்கிச்சேவையினை ATM இயந்திரத்தில் தொடரலாம். எவ்வாறாயினும் ஒருவர் ATM அட்டையின் PIN இலக்கத்தினை தவறுதலாக மூன்று தடவைகள் உட்செலுத்தினால் ATM இயந்திரமானது ATM அட்டையினை பாதுகாப்பு கருதி உள்வாங்கி கொள்ளும்.

எமது நாட்டில் சில வணிக வங்கிகள் கீழேகாட்டப்பட்ட தன்னியக்க ரெலர் அட்டைகளை வழங்குகின்றன.

- ✓ மக்கள் வங்கி – பெட் கார்ட்
- ✓ சம்பத் வங்கி – செட் காட்
- ✓ செலான் வங்கி - ஸ்மார்ட் கார்ட்

**தொலை வங்கி (Tele Banking):**

கம்பி வழி மூலமாகவும் (Tele Banking) கையடக்க தொலைபேசி மூலமாகவும் வங்கியினால் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட குறித்த தொலை வங்கி இலக்கத்திற்கு அழைப்பு விடுவதன் மூலம் வாடிக்கையாளர்கள் தமக்கு தேவையான வங்கிச்சேவையினை பெறலாம். தொலை வங்கி மூலம் வாடிக்கையாளர்கள் தமது கணக்கு மீதியினை அறிய, வங்கி கணக்கு தொடர்பான விசாரணை செய்ய, வங்கிக் கூற்றினை e-mail மூலமாக பெற, காசோலை புத்தகத்திற்கான வேண்டுகோளை முன்வைக்க, கணக்கினை புதுப்பிக்க, வங்கி கணக்கிலுள்ள பணத்தினை பரிமாற்றம் செய்ய என பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**வரவட்டை (Debit Card)**

வரவட்டையானது கடனட்டை மற்றும் ATM அட்டை போன்ற வடிவம் கொண்டது. ஆனால் இது காசு மற்றும் காசோலை போல தொழிற்படக்கூடியது. மேலும் வரவட்டையை வாடிக்கையாளர்கள் தமது கொடுக்கல் வாங்கல்களின்போது பயன்படுத்தினால் வாடிக்கையாளர்களின் கணக்கிலிருந்து பணமானது நேரடியாக வரவில் வைக்கப்படும். பொதுவாக சில்லறை வியாபார நிலையங்களில், பெற்றோல் நிலையங்களில், உணவகங்களில் இவ்வட்டையானது பணத்திற்கு பதிலாக பயன்படுத்தப்படுகின்றது. எமது நாட்டில் சில வணிக வங்கிகள் கீழே காட்டப்பட்ட வரவட்டைகளை வழங்குகின்றன.

- ✓ கொமர்ஷல் வங்கி – கெட் கார்ட் (CAT Card)
- ✓ சம்பத் வங்கி – செட் காட் (SET Card)

**கடனட்டை (Credit Card)**

இது ஒரு பிலாஸ்டிக் வடிவ அட்டையாக காணப்படுவதுடன் வங்கியினால் வாடிக்கையாளரின் நம்பகத்தன்மையினையும் குறித்த பணப்பெறுமதியினையும் அடிப்படையாகக்கொண்டு வங்கியினால் வழங்கப்படுகின்றது. இச்சேவையானது வாடிக்கையாளர்களின் வங்கிக் கணக்கு மீதியுடன் தொடர்புபட்டவையல்ல. மாறாக குறித்த தினத்தில் வாடிக்கையாளர்கள் கடனட்டையை அனுமதிக்கப்பட்ட வணிக நிறுவனங்களுக்கு சமர்ப்பித்து யாதேனுமொரு குறிப்பிட்ட பெறுமானம் வரையில் பொருட்களையும் சேவைகளையும் பெற்றுக்கொள்ள முடிவதுடன் வாடிக்கையாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்கான பணத்தினை குறித்த வட்டியுடன் வாடிக்கையாளர்கள் வங்கிக்கு மீளசெலுத்த வேண்டும். எமது நாட்டில் சில வணிக வங்கிகள் கீழே காட்டப்பட்ட கடனட்டைகளை வழங்குகின்றன.

- ✓ மக்கள் வங்கி - பீபல்ஸ் வீசா
- ✓ சம்பத் வங்கி - மாஸ்டர் காட்
- ✓ செலான் வங்கி - செலான் வீசா கார்ட்

வரவட்டைக்கும் கடனட்டைக்கும் இடையிலான வேறுபாடு, வைப்புக்களின் அளவை அடிப்படையாகக் கொண்டே வரவட்டை வழங்கப்படும். கடன் எல்லையை அடிப்படையாகக் கொண்டே கடனட்டை வழங்கப்படும். வணிகர்கள் இவ்வட்டைகள் மூலம் தேவையான பொருட்களை கொள்வனவு செய்யும்போது பணத்தை கொண்டு செல்லும்போது ஏற்படும் இடர் தவிர்க்கப்படும்.

**இலத்திரனியல் காசோலை (E- Cheque)**

இலத்திரனியல் காசோலையானது தாள் காசோலை போன்றது. ஆனால் இலத்திரனியல் தொழில்நுட்பத்தின் மூலம் காசோலையானது வரையப்பட்டு இலத்திரனியல் மூலமாக பெறுனருக்கு வழங்கப்படுகின்றது. மேலும் காசோலையானது இலத்திரனியல் மூலமாகவே பெறுனர் கணக்கில் வைப்பிலிடப்படுவதுடன் வங்கியானது இலத்திரனியல் காசோலைக்கான கட்டணத்தை இலத்திரனியல் மூலமாகவே காசோலை விநியோகிப்பவரிடமிருந்து அறவிடப்படுகின்றது.

இலத்திரனியல் வங்கிச்சேவை மூலமாக பெறக்கூடிய நன்மைகள்

வங்கிக்கு : இலத்திரனியல் வங்கிச்சேவை மூலம் குறிப்பிட்ட வங்கியானது பெருமளவு வாடிக்கையாளர்களுக்குத் தேவையான வங்கிச்சேவையினை புவியியல் எல்லைக்கு அப்பால் 24 மணித்தியாலமும் ஏழு நாட்களும் இலகுவானதாகவும் விரைவானதாகவும் வழங்கக்கூடியதாக உள்ளதுடன் புதிய சந்தையினை அடையக்கூடியதாகமுள்ளது மேலும் காகித முறையின்றி இலகுவானதாக நடைமுறைப்படுத்தக்கூடியதாக உள்ளதுடன் வங்கிக்கிளைகளை முகாமை செய்யும் அளவினையும் முகவர்களின் எண்ணிக்கையை குறைக்கக் கூடியதாகமுள்ளது. ஆகவே வங்கிக்கு செலவு குறைவு, நிலையான வாடிக்கையாளர்களை பெற்றுக்கொள்ளலாம், மேலும் நன்மதிப்பை மக்கள் மத்தியில் பெற்றுக்கொள்ளலாம்.

வாடிக்கையாளர்களுக்கு : இலத்திரனியல் வங்கிச்சேவை மூலம் வாடிக்கையாளர்கள் வங்கிக்கு நேரடியாக செல்லாது எங்கிருந்தாலும் எந்நேரத்திலும் சேவையை பெறலாம். மேலும் இச்சேவையானது மிக இலகுவானதாகவும் விரைவானதுமாக காணப்படுகின்றது. மேலும் வாடிக்கையாளர்கள் பணத்தினை வைப்புச்செய்ய, கணக்கு மீதியினை அறிய, பணத்தினை மீளப்பெற, மாதாந்த கொடுப்பனவுகளை செலுத்தக்கூடியதாக உள்ளதுடன் வங்கி கணக்கினை எங்கிருந்தாலும் முகாமை செய்யக்கூடியதாகவுமுள்ளது மேலும் வாடிக்கையாளர்கள் வங்கிக்குச்சென்று காத்திருக்கும் நேரம் குறைக்கப்படுவதனால் அந்நேரத்தை வேறு நோக்கம் கருதி மிக வினைத்திறனாக பயன்படுத்தலாம்

**உசாத்துணை**


- http://sjecnotes.weebly.com/uploads/5/2/5/1/5251788/26494919-definition-of-e-banking.pdf
- http://www.upet.ro/annals/economics/pdf/2014/part1/Driga-Isac.pdf
- http://www.ismsedu.com/E-Banking%20Management.pdf